வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.0184/அ4/2024 நாள் : .02.2025

பொருள் : பள்ளிக் கல்வி –நாட்டுநலப் பணித்திட்டம் 2024 – 2025ஆம் கல்வியாண்டு – மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படும் –நாட்டு நலப்பணி திட்ட அலகுகள் – காலாண்டு மற்றும் அரையாண்டு விடுமுறை நாட்களில் நடைபெறும் மாணவர்களுக்கான சிறப்பு முகாம் மாவட்ட தொடர்பு அலுவலர்கள் (DLOS) மற்றும் திட்ட அலுவலர்கள் (POS) பணியாற்றியமைக்கு ஈடு செய்யும் விடுப்பு அனுமதித்தல் – தொடர்பாக

பார்வை :

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறை ந.க.எண்.175117/COSE/PC/2023, நாள்.06.05.2023.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்) செயல்முறை ந.க.எண்.062543/எல்/இ1/2024 நாள்.23.09.2024 மற்றும் 04.11.2024

-----

பார்வை 2இல் காணும் செயல்முறைகளின்படி நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு விடுமுறை நாட்கள் பணியாற்றியமைக்காக ஈடுசெய்யும் விடுப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே வேலூர் மாவட்டத்தில் அரசு/ நகராட்சி /அரசு நிதியுதவி மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித்திட்டம் 2024 –2025ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படும் நாட்டு நலப்பணித்திட்ட அலகுகள் காலாண்டு மற்றும் அரையாண்டு விடுமுறையில் 7 நாட்கள் நடைபெற்ற மாணவர்களுக்கான சிறப்பு முகாமில் அனைத்து மாவட்ட தொடர்பு அலுவலர்களும் (DLOS) மற்றும் திட்ட அலுவலர்கள் (POS) விடுமுறை நாட்களில் அதிகபட்சமாக ஆறு நாட்கள் வருகை புரிந்து பணியாற்றியிருந்தால் மட்டும் ஈடு செய்யும் விடுப்பு அனுமதிக்கலாம்.

மேலும் இவ்விடுப்பினை தொடர்சிசியாக எடுக்காமல் அவ்வப்போது ஒரு நாள் வீதம் விதிகளின்படி 6 மாத கால அவகாசத்திற்குள் எடுக்க வேண்டுமென்றும் இது சார்ந்த ஈடு செய்யும் விடுப்பு ஏற்கனவே துய்க்கப்பட்டிருந்தால் அவ்விடுப்பு போக மீதமுள்ள நாட்களுக்கு மட்டும் விடுப்பு வழங்குமாறும் அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமை ஆசிரியர்,
அரசு/நகராட்சி/அரசு நிதியுதவி மேல்நிலைப்பள்ளி,
வேலூர்.